# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2023 சனவரி

## (104) வணிகச் சூழல்

பரீட்சார்த்திகளின் பாட சம்பந்தமான ஒட்டுமொத்த அறிவினையும் விளக்கத்தினையும் பரீட்ச்சிக்கும் நோக்கில் மட்டம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள வணிகச்சூழல் பாடத்தின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கியதாக வினாத்தாள் அமைந்துள்ளது. ஒட்டுமொத்தமாக பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயல்த்திறன் திருப்பதிகரமாக உள்ளபோதிலும் ஏனைய சில மாணவர்கள் நன்றாக விடையளிக்க தவறியுள்ளனர். மாணவர்கள் எவ்வாறு விடையளித்துள்ளனர் என்பதை அவதானிக்கும் போது, கேள்வியினை விளங்கிக்கொள்வதில் பிழைகளை தவிர்ப்பதும் போதுமான புள்ளிகளை பெற்றுக்கொள்வதற்காக புள்ளிரீதியாக விடையளிப்பதும் முக்கிய விடயமாக கண்டறியப்பட்டுள்ளது.

### <u>பகுதி A</u>

### வினா 01

இப்பிரிவின் மூலம், வணிகச்சூழல் பாடத்தின் அனைத்து பகுதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் பெரும்பாலும் அனைத்து மாணவர்களும் வினாவினை முயற்சித்துள்ளனர். 100 புள்ளிகளில் 40 புள்ளிகள் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் பெரும்பாலான மாணவர்கள் 20 தொடக்கம் 30 இடையில் புள்ளிகளை பெற்றுள்ளனர். பெரும்பாலான மாணவர்கள் வினா இல. 1.6, 1.8, 1.14, மற்றும் 1.18 இற்கு வெற்றிகரமாக விடையளிக்கவில்லை. வினாக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு:

**1.6** பெரும்பாலான மாணவர்கள் கொழும்பு பங்கு பரிவர்த்தனை பற்றி சரியாக தெரிந்திருக்கவில்லை. பெரும்பாலான மாணவர்கள் "முதலீட்டாளர்கள் தங்களது பங்குகளை காசாக மாற்றுவதற்கு இது உதவுகின்றது" எனும் கூற்றினை தெரிவுசெய்துள்ளனர். ஆனால் CSC ஆனது மூலதனச்சந்தையில் இயங்கும் தனிப்பட்ட மற்றும் நிறுவன முதலீட்டாளர்களுக்கு ஒழுங்குபடுத்தப்பட்ட சூழலை வழங்குவது பற்றி மாணவர்கள் அறிந்திருக்கவில்லை.

**1.8** பெரும்பாலான மாணவர்கள் மொத்தவியாபாரத்தின் அம்சங்கள் பற்றி அறிந்திருக்கவில்லை. சரியான விடையான "கணிசமான அளவிலான கடன் நடவடிக்கைகளை உள்ளடக்கியது" என்பதற்கு பதிலாக விடை இலக்கம் 3 இனை தெரிவு செய்துள்ளனர்.

**1.14** பெரும்பாலான மாணவர்கள் வெற்று ஒப்புதல் பற்றி அறிந்திருக்கவில்லை. ஆகவே அவர்கள் புள்ளிகளை பெறத் தவறியுள்ளனர்.

**1.18** பெரும்பாலான பரீட்சார்த்திகள் போட்டரின் ஐந்து காரணிகளின் பகுப்பாய்வு பற்றி அறிந்திருக்கவில்லை. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவிற்கு விடையளிக்கத் தவறியுள்ளனர்.

இருப்பினும், மேற்குறிப்பிட்ட வினாக்கள் தவிர இப்பகுதிக்கு மாணவர்கள் சிறப்பாக விடையளித்துள்ளனர்.

## பகுதி B

இப்பிரிவு 4 கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் 10 புள்ளிகளைக் கொண்டுள்ளது.

### வினா 02

இவ்வினா கூட்டிணைக்கப்பட்ட அமைப்புக்களின் பாடத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

**பகுதி (a)** இவ்வினா கூட்டிணைப்புச் சான்றிதளில் உள்ளடக்க வேண்டிய விடயங்களை அடையாளம் காணுமாறு வேண்டப்பட்டுள்ளது. இப்பகுதிக்கு பெரும்பாலான மாணவர்கள் சரியாக விடையளிக்கவில்லை என்பதுடன் சரியான விடைக்கு பதிலாக அவர்கள் பங்குதாரர்கள் மற்றும் இயக்குனர்களின் விபரங்களை எழுதியுள்ளனர். ஒரு சில மாணவர்கள் மட்டுமே முழுமையான மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர்.

**பகுதி (b)** நாட்டினுடைய பொருளாதாரத்திற்கு வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகளால் ஏற்படக்கூடிய நன்மைகள் சோதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலானவர்கள் தமது பொது அறிவினை அடிப்படையாகக்கொண்டு இவ்வினாவிற்கு விடையளித்துள்ளனர்.

**பகுதி (c)** கம்பனிச்சட்டத்தின் படி கம்பனியின் பெயரை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி பெரும்பாலான மாணவர்களுக்கு அபிப்பிராயமில்லை. பெரும்பாலான மாணவர்கள் மாற்று விடைகளை வழங்கி 3 இற்கு 1 புள்ளியினை பெற்றுள்ளனர்.

### வினா 03

வணிக துணைச் சேவைகள் மீதான பரீட்சார்த்திகளின் அறிவினை சோதிக்க எதிர்பார்க்கப்பட்டள்ளது.

**பகுதி (a)** பெரும்பாலான பரிட்சார்த்திகள் சிறப்பாக விடையளித்து முழு மதிப்பெண்களையும் பெற்றுள்ளனர். சிலர் காப்புறுதி கொள்கைகளுக்கு பதிலாக காப்புறுதி கோட்பாட்டினை வழங்கியுள்ளனர். ஆகவே பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தை படித்து சிறந்த அறிவினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**பகுதி (b)** வணிக நிறுவனமொன்றுக்கு காப்புறுதியின் முக்கியத்துவத்தின் மீதான காரணத்தை விளக்குமாறு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இரண்டு காரணங்களுக்கு ஒரே கருத்தினை விளக்கியுள்ளனர். ஆகவே 4 இற்கு 2 புள்ளிகள் மட்டுமே அவர்களால் பெற முடிந்தது.

**பகுதி (c)** இப்பகுதிக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் 4 இற்கு 3 புள்ளிகளை பெற்றுள்ளனர். அவர்கள் வினைத்திறனான போக்குவரத்து முறைமையின்மையால் நிறுவனங்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகளை பொது அறிவினைக்கொண்டு குறிப்பிட்டுள்ளனர்.

## வினா 04

**பகுதி (a)** நவீன வியாபாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு காட்சி வகை வினாவாகும்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் E-Way ஆனது வணிக வாடிக்கையாளர் இலத்திரனியல் வியாபாரத்துடன் தொடர்புபட்டுள்ளதை இனங்காணவில்லை. ஆகவே அவர்கள் புள்ளிகளை பெற தவறியுள்ளனர்.

**பகுதி (b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் இலத்திரனியல் வர்த்தக முறைமையின் நன்மைகள் மற்றும் தீமைகள் விளங்கிக்கொண்டுள்ளமையால் முழுமையான மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

**பகுதி (c)** இலங்கையில் வணிகங்களுக்கு வசதி செய்யும் அரச நிறுவனங்களை அடையாளம் காண தவறியதால் பெரும்பாலான பரீட்சார்த்திகள் 4 புள்ளிகளில் 2 புள்ளிகளை மட்டுமே பெற்றுள்ளனர். பெரும்பாலானோர் சரியான விடைக்கு பதிலாக தமது பொது அறிவினைக் கொண்டு பொதுவான விடையினை வழங்கியுள்ளனர்.

உ-ம் : இலங்கை மத்திய வங்கி, கொழும்பு பங்கு பரிவர்த்தனை, etc.

சராசரி எண்ணிக்கையிலான மாணவர்கள் இப்பகுதிக்கு சிறப்பாக விடையளித்துள்ளனர்.

## வினா 05

வணிக துணைச் சேவைகள் மற்றும் முயற்சியாண்மை மீதான பரீட்சார்திகளின் அறிவினை சோதிக்க இவ்வினாவில் எதிர்பார்க்கப்பட்டுள்ளது

**பகுதி (a)** ஒரு சிறந்த நீர்வழிப் போக்குவரத்து முறைமையின் நன்மைகளை பெரும்பாலான மாணவர்கள் இனங்கண்டு பூரண மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர்.

**பகுதி (b)** பெரும்பாலானோர் இப்பகுதிக்கு சரியாக விடையளிக்கவில்லை. உரிமம் பெற்ற வணிக வங்கிகளால் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கு பதிலாக அவர்கள் பொது மக்களுக்கு வழங்கும் சேவைகளை விளக்கியுள்ளனர். ஆகவே பரீட்சார்த்திகளால் 3 புள்ளிகளுக்கு 2 புள்ளிகளை மட்டுமே பெற்றுக்கொள்ள முடிந்தது.

**பகுதி (c)** முயற்சியாண்மை மற்றும் வணிகம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பை பெரும்பாலான மாணவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை. ஆனால் முயற்சியாண்மை மற்றும் வணிகத்தினை தனித்தனியாக விபரித்துள்ளனர். ஆகவே 4 புள்ளிகளில் 2 புள்ளிகளை மட்டுமே பெற்றுள்ளனர்.

## பகுதி C

**வினா 06**

**C Soft** எனும் மென்பானங்கள் தயாரிக்கும் நிறுவனத்தினது ஒரு வழக்கு சம்பந்தப்பட்ட வினாவாகும். பெரும்பாலும் அனைத்து மாணவர்களும் இவ்வினாவினை முயற்சித்ததோடு மொத்தம் 20 புள்ளிகளில் 11-16 வரையான புள்ளிகளை பெற்றுள்ளனர்.

**பகுதி (a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் C-Soft வணிகத்தினை ஒழுக்காற்று விதிகளுக்கமைய நடாத்துவதற்கான சூழல் காரணிகளை எழுதியுள்ளனர். ஆகவே பரீட்சார்த்திகள் பாடப் புத்தகத்தை பயன்படுத்தி போதுமான அறிவினை பெற வேண்டும்.

**பகுதி (b)** புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதால் வணிகத்திற்கு ஏற்படும் நன்மைகள் மீதான மாணவர்களின் அறிவினை சோதிப்பதற்கு இவ்வினா எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது ஒரு திறந்த கேள்வியாக இருப்பதால் அவர்கள் பொது அறிவினைக் கொண்டு விடையளித்து பூரண மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

**பகுதி (c)** சுற்றுச்சூழல் மாசடைவதை தடுப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை இவ்வினா சோதித்துள்ளது. ஒரு சிலர் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமை மூலம் மாசடைதலை தடுப்பதற்கான காரணிகளை மட்டும் குறிப்பிட்டுள்ளனர். பெரும்பாலானோர் பூரண மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

**பகுதி (d)** இப்பகுதி C-Soft தற்போது கொண்டுள்ள பொருளாதார வளங்களை சோதித்துள்ளது. பெரும்பாலானோர் இப்பகுதிக்கு பூரண மதிப்பெண்களை பெற்றுள்ளனர். ஒரு சிலர் கணிணி மென்பொருள், விவசாயி, போக்குவரத்து முறைமை, மற்றும் பழங்கள் என்பன பொருளாதார வளங்கள் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

**பகுதி (e)** சமூகமானது C Soft இன் ஒரு முக்கியமான நாட்டதாரராக (stakeholder) கருதுவதற்கான காரணிகளை சோதித்துள்ளது. சராசரி எண்ணிக்கையிலான மாணவர்கள் புள்ளரீதியாக விடையளித்து முழு மதிப்பெண்களையும் பெற்றுள்ளனர். ஒரு சிலர் இவ்வினாவிற்கு விடையளித்திருக்கவில்லை. சராசரி எண்ணிக்கையிலான மாணவர்கள் சுற்றுச் சூழல் மாசடைதலை தடுப்பதற்கு சமூகமானது C Soft இன் ஒரு முக்கியமான நாட்டதாரராக (stakeholder) ஏன் கருதப்படுகிறது என தெளிவாக விடையளித்துள்ளனர்.

விடையளிக்க முன்னர் கேள்வியினை வாசித்து தெளிவாக விளங்கிக்கெள்ளல் அவசியமானது.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் விளங்கிக் கொள்ளும் மட்டத்தை விருத்தி செய்வதில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள் :</u>**

(1) ஏஎரி ஸ்ரீ லங்காவினால் வெளியிடப்பட்ட சுய கற்றல் பாடப்புத்தகம் முழுப் பாடத்திட்டத்தையும் உள்ளடக்கிய சிறந்த வழிகாட்டியாக இருப்பதால் அதனை உயர்ந்தபட்சம் பயன்படுத்துங்கள்.

(2) வினாவைக் கவனமாக வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். ஒரு நேரடியான மற்றும் துல்லியமான விடை எதிர்பார்க்கப்படும்போது தேவையற்ற விளக்கங்களையும் விவரங்களையும் எழுத வேண்டாம்.

(3) விடையளிக்கும்போது நேர முகாமை மிக முக்கியமானதாகும்.

(4) வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரல் வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs) தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு வினைச்சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் விடையளித்தல் வேண்டும்.

(5) விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்களும் உங்களுடைய சுட்டெண்ணும் சரியாக எழுதப்பட்டுள்ளதா எனப் பரிசீலிக்கவும்.

(6) வினாத்தாளிலேயே விடைகளை எழுத வேண்டாம். விடைகளை விடைப்புத்தகத்தில் மாத்திரமே எழுதுதல் வேண்டும்.

(7) கடந்த கால வினாத்தாள்களுக்கு விடையளித்துப் பழகுவதன் மூலம் உங்களால் பாட அறிவையும் விடையெழுதும் ஆற்றலையும் மேம்படுத்திக் கொள்ள முடியும்.

(8) அறிவை இற்றைப்படுத்திக் கொள்வதற்காக அண்மையில் வெளிவந்த சஞ்சிகைகள், கையேடுகள், செய்தித்தாள்கள் மற்றும் பாடப் புத்தகங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும்.

- * * * -